நாள்: 14.09.2023
HMOP.242/2021
பெயர்: பழனியம்மாள்
ம.சா.1

<u>குறுக்கு விசாரணை</u>

திருமணமாகி சேர்ந்து வாழ்ந்தது 15 நாள். அதற்கு பின்னர் சண்டையும் சச்சரவுமாக இரண்டு ஆண்டுகள். எதிர்மனுதாரருக்கு எற்கனவே திருமணம் நடந்தது தெரிந்து தான் நான் இரண்டாவது திருமணத்திற்கு சம்மதித்தேன். நான் என் கணவர் மீது ஆண்டிபட்டி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் வரதட்சனை கொடுமை செய்ததாக கூறி புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த குற்ற வழக்கிலிருந்து என் கணவர் விடுதலை செய்யப்பட்டார் என்றால் என் பக்கம் தீர்ப்பாகியதாகத்தான் என்னிடம் சொன்னார்கள். நான் என் கணவர் வீட்டில் அத்து மீறி நுழைந்ததாக கம்பம் வடக்கு காவல்நிலையத்தில் என்மீது புகார் கொடுத்தார் என்றால் சரிதான். என் கணவர் என்மீது விவாகரத்து கோரி HMOP.134/2012 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் எனக்கு ஆஜராக 08.01.2013ல் வழக்கறிஞர் பாண்டி என்பவரை நியமனம் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் எதிருரை தாக்கல் செய்ய பலமுறை வாய்ப்பு கொடுக்கப்பட்டும் நான் எதிருரை தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. அதனால் 04.01.2014ல் ஒருதலைப்பட்சமாக விவாகரத்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் தெரியும். நான் ஜீவனாம்சம் கேட்டு என் கணவர் மீது உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் MC.9/2008 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 2008லிருந்து என் கணவரிடமிருந்து ஜீவனாம்சம் பெற்று வருகிறேன் என்றால் சரிதான். நான் 2018ம் ஆண்டு ஒருதலைப்பட்ச விவாகரத்து தீர்ப்பாணையை ரத்து செய்ய IA.99/2018 பிரிவு 5 காலவரையறைச்சட்டப்படி 1518 நாள் காலதாமதத்தை மன்னிக்க வேண்டும் என மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் உண்மையில் சேர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால் அந்த மனு தாக்கல் செய்த காலகட்டத்திலேயே இந்த மனுவையும் தாக்கல் செய்திருப்பேன் என்றால் எனக்கு தள்ளுபடியானது பற்றி தெரியாது. தெரிந்தால் தாக்கல் செய்திருப்பேன். IA.99/2018 முழுமையான விசாரணைக்கு பின்னர் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அதற்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேன். 12 ஆண்டுகள் எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்காமல்

எதிர்மனுதாரரை கஷ்டப்படுத்த வேண்டும் என்பதற்காகவே சேர்ந்து வாழ வேண்டும் என இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் கணவர் வேண்டும் என்றும், என்னுடைய குழந்தைக்காகவும் இந்த மனு தாக்கல் செய்துள்ளேன். மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.